★ புகலின் கோரிக்கை பரிசீலனைக்கு வருகிறது

(கொழும்பு)
இலங்கை இனப் பிரச்சனை தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இரு கோரிக்கைகளைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்துள்ளது.
பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறுமுன் யுத்த நிறுத்தமும், வடக்கு ... 
(4-ம் பக்கம் பார்க்க)

29-11-1991

விலை ரூபா 5-00


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 88 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 13 இதழ்: 289
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29.11.1991


## அரியாலைப் பகுதியில் விமானகுண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)
அரியாலை கிழக்குப்பகுதியில் நேற்றுமாலை இரு பொம்மர் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.
அரியாலை பூம்புகார், நாவலடி, குடிமனைகளை நோக்கி நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (56

## மணலாறில் தாக்குதல்

(மணலாறு)
மணலாறு பகுதியில் நேற்று முன்தினம் அவ்ரோ மேற்கொண்ட குண்டுவீச்சு தாக்குதலில் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.
செம்மலை, அளம்பில், நாயாறு பகுதியில் இக்குண்டு வீச்சு தாக்குதல் இடம்பெற்றது. இப்பகுதியில் கடந்த 24ம், 27ம் திகதிகளிலும் குண்டு வீச்சு தாக்குதல் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (இ)

★ வவுனியா மாமடுவில்

# 3 காவலரண்கள் முற்றாகத் தகர்ப்பு

# பத்து படையினர் உயிரிழப்பு

## பல நவீன ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் மூன்று இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 10 படையினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. காவலரண்கள் யாவும் முற்றாக தகர்க்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வெலியூர் என்னுமிடத்தில் வவுனியாவிலுள்ள மாமடு அமைந்துள்ள இராணுவ பாதுகாப்பு தென்மேற்கிலுள்ள காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் நடத்தினார்கள்.
இரண்டு மணிநேரம் இடம்பெற்ற இத்தாக்குதலில் பொலிஸ் ஒருவர் உட்பட பத்துக்கு மேற்பட்ட படையினர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். பல நவீன ஆயு
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் அம்பாறையில் மோதல்

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்திலுள்ள விநாயகர்புரத்தில் விடுதலைப்புலிகளுக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும்
(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்தியா தொடர்ந்து பேச்சு

(கொழும்பு)
தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்குக் கொண்டுவருவது தொடர்பாக இலங்கைக்கும் இந்தியா
(4-ம் பக்கம் பார்க்க)

## நாற்பது கைதிகள் புலிகளால் விடுதலை

(யாழ்ப்பாணம்)
பல்வேறு காரணங்களினால் விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் 40 பேர் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு விடுதலை செய்யப்படவுள்ளார்.
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கோண்டாவில் தலைமைச் செயலகத்தில் வைத்து இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.
விடுதலை செய்யப்படுபவர்களின் பெயர் விபரம் நாளைய ஈழநாடு பத்திரிகையில் வெளியாகும்.

## சிவில் நிர்வாக முயற்சிக்கு பதிலடித் தாக்குதல்கள்

(கொழும்பு)
வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பதிலடியாக விடுதலைப்புலிகள் வவுனியாவில் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.
இதன் ஒரு கட்டமாகவே மாமடுவில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறப்ப
(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் வென்ற பின்பே அரசியல் தீர்வு காணப்படும்

(கொழும்பு)
"யுத்தத்தில் வெற்றிபெறுவதே எமது நோக்கம். அதன் பின்பே அரசியல் தீர்வுகாண முடியும்" என பிரதமர் டி.பி. விஜேதுங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் வரவு-செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசியலமைப்பின்படி
(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியா முழுவதிலும் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)
இந்தியா முழுவதும் இன்று வேலைநிறுத்தம் நடைபெற இருக்கிறது.
பல்வேறு தொழிற் சங்கங்கள் இந்த வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தமிழ்நாட்டில் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. (ஈ)

## மன்னார் பகுதியில் 'ஒபரேஷன் கிறீன் பெல்ற்'

(மன்னார்)
மன்னாரில் "ஒபரேஷன் கிறீன் பெல்ற்" என்ற இராணுவ நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.
கடந்த இரு தினங்களாக இந்த நடவடிக்கை இடம்பெற்றதாகவும் புலிகளின் பலமான எதிர்ப்பு இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை மன்னாரில் மேலும் இராணுவ நடவடிக்கை தொடரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஆயுதங்களை கைவிட்டபின்பே பேச்சு நடத்தவேண்டும்

(கொழும்பு)
"விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே அரசு பேச்சுவார்த்தைகளுக்கு உடன்படவேண்டும்"
இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் திரு. தினேஸ் குணவர்த்தன நாடா
(4-ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதி ஆசிரியர்கள் ஊர்வலம் நடத்த முஸ்தீபு

(வேலணை)
தீவுப்பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான சம்பளம் தீவுப்பகுதியிலுள்ள படையினரால் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருப்பதனைக் கண்டித்து தீவுப்பகுதி
(4-ம் பக்கம் பார்க்க)

## 6 வாரங்களுக்கு மேலாக வடக்கே உணவு போகவில்லை

(கொழும்பு)
வடபகுதிக்கு கடந்த ஆறு வாரங்களுக்கு மேலாக உணவுப்பொருள்கள் எதுவுமே அனுப்பப்படவில்லை என பி.பி.ஸி. தெரிவித்தது.
இப்பகுதிக்கு உணவுப்
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை கால் அழற்சி, சூதகக்குத்து, கரும நோய்கள் மற்றும் சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், வி. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(இ-5547)

## பழைய புத்தகங்கள்

உங்களிடமுள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவை நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும். யாழ் பழைய புத்தகக்கடை, 82, கஸ்தூரியார் (பிரான்பற்று) வீதி.

(சி-5630)

## தொழில் கல்வி

International Association of Book-Keepers (London) Foundation, Inter. Final Computer-Basic, Short-hand & Typing வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகின்றன. விபரங்கள் நேரில். School of Business Administration, 16 3rd Cross Street, Jaffna.

(சி-5640)

## திருமலைக் கடிதங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கு வந்த கப்பலில் ஏராளமான திருமலை கடிதங்களும் வந்தன. ஒரு மாதத்திற்கு முந்திய அனுப்பப்பட்ட கடிதங்களும் வந்ததாக கூறப்படுகிறது.

(59)

## போத்தல்கள் தேவை

பின்வரும் விலைகளில் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

| | |
|---|---|
| ஜாம் போத்தல்கள் | ரூபா 5-00 |
| ஜாம் போத்தல்கள் (சிறியது) | ரூபா 2-50 |
| விவா, ஹொர்லிக்ஸ் (400 g. மூடியுடன்) | ரூபா 5-00 |

**Taste Line Industries (pvt) Ltd**

ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ்

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(ஏ-1697)

## யூனைற்றட் என்ஜினியர்ஸ்
# தொழில் நுட்ப கல்வி நிறுவனம்

றேடியோ, ரீ. வி, சேர்விஷிங்

(காலம் 6 மாதங்கள்) தமிழ் மூலம்

பயிற்சியின் உள்ளடக்கமானது

- பழுதுகளின் காரண விளக்கங்கள் அவற்றின் மாற்று மதிப்புகள்.
- சகல இலத்திரனியல் உபகரணங்களும் "எப்படி இயங்குகின்றன (How it works) என்ற அடிப்படையிலான விளக்கங்கள் ஆகியவற்றை கொண்டது.

மிக விரைவில் ஆரம்பம்

விண்ணப்பங்கள் நேரில்

பணிப்பாளர்

271, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5637)

## விண்ணக வாழ்வின் 3-ம் ஆண்டு
# நினைவஞ்சலி



அமரர் இராஜசேகரம்
அகஸ்ரின் செல்வராஜா

("வர்த்தகருக்குள் மதிக்கிறவர்கள் பாக்கியவான்கள்")

தோற்றம்: 31-12-1951

மறைவு: 29-11-1988

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் சனிக்கிழமை (30-11-91) காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அன்புடன் நினைவுகூரும்:
குடும்பத்தினர்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(எ-1740

## சந்திப்பு

(வவுனியா)

வடபகுதிக்கான இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவை 'டெலோ' குழுவினர் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது லெப். கேணல் கஜவரத்தினமும் உடனிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இளிதொச்சி மாவட்டத்தில் உள்ள விசுவமடுவுக்கு சமீபமாகவுள்ள பிரமந்தனாறு கிராமத்தை சேர்ந்த இருபது பேருக்கு வாழைநாரை பயன்படுத்தி பொருட்கள் செய்வதற்கான ஆரம்ப பயிற்சி தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ளது.

## கிணற்றுக்கு பலி

(வண்டத்தரிப்பு)

இரவு வேளையில் கிணற்றில் தண்ணீர் அள்ளிவரச் சென்ற எட்டு வயது சிறுமி ஒருவர் கிணற்றிக்கு பலியான பரிதாப சம்பவம் உடுவிலில் இடம் பெற்றுள்ளது.

வேலன் மாசிருத்து என்ற இந்த சிறுமியின் பெற்றோர் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வந்து உடுவிலில் தஞ்சமடைந்திருந்தனர்.

(72)

## பாதுகாப்பு சேவைக்கு பாராட்டு

(உடுவில்)

சுன்னாகம் வர்த்தகர்சங்கம் தமது பாதுகாப்பு சேவையை சிறப்பாக செய்து வருவதை யிட்டு உடுவில் பிரதேச காவலவை பொறுப்பாளர் திரு. தமிழரசன் வர்த்தகர் சங்கத்தை பாராட்டியுள்ளார். ஏனைய இடங்களில் நடைபெறும் களவுகளோடு ஒப்பிடும்போது இச்சங்கத்தின் விழிப்புணர்வால் இப்பகுதியில் பெருமளவு களவுகள் நடைபெறாதது தவிர்க்கப்பட்டுள்ளது.

(109)

## 4 ஆயிரம் மரக் கன்றுகள் இலவச விநியோகம்

(வண்டத்தரிப்பு)

இளவாலை – முள்ளானை கலைவாணி சனசமூக நிலையம் மாவீரர் நினைவுநாளில் 4000 மரக்கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளது. பொதுஸ்தாபனங்கள், சனசமூகநிலையங்கள் ஆகியவற்றுக்கும், பொது மக்களுக்கும் மலைவேம்பு, இலுப்பை, புளி, பலா, மா, கமுகு போன்ற பல்வேறு பயன்தரும் மரக்கன்று வகைகள் வழங்கப்பட்டன.

கடந்த வருடம் நடைபெற்ற மாவீரர் நினைவு வாரத்திலும் 4000 மரக் கன்றுகளை இந்த நிலையம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஒய்வூதியம் ஒரு மாதத்தில் பெறமுடியும்

(கொழும்பு)

அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் அரச ஊழியர் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை ஒரு மாதத்தினுள் பெற்றுக் கொள்ள முடியும். ஒய்வூதியக் கொடுப்பனவுகளை தாமதம் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதுதொடர்பாக ஒழுங்காற்று கைநூலில் திருத்தங்கள் கொண்டுவரவிருப்பதாக பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

# இந்திய ராணுவம் வெளியேற்றம்: ஜனாதிபதி ஆட்சிமுறையே காரணம்

(கொழும்பு)

"இந்திய ராணுவம் இந்நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு ஜனாதிபதி ஆட்சி முறையே காரணமாகும்."

இவ்வாறு நீதி உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீட் நாடாளுமன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். அவர் உரையாற்றும்போது கூறியதாவது:

ஜனாதிபதி ஆட்சி முறையை இந்த நாட்டில் கடைப்பிடிக்காது இருந்திருந்தால் இந்திய ராணுவம் இங்கிருந்து வெளியேறியிருக்க முடியாது. அத்தோடு ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்கும் இந்த ஜனாதிபதி ஆட்சி முறையே காரணமாகும் என்றார்.

## 31 ஆம் நாள்
# நினைவஞ்சலி



அமரர் பிள்ளையினர் தியாகராஜன்

(முன்னாள் அநுராதபுரம் ஜெயசேகன் அன்கோ பங்காளரும், திக்கம் இரத்தினம் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், நோவு முறிவு வைத்தியரும்)

மண்ணுறவு: 16-05-1927

விண்ணுறவு: 30-10-1991

செய்தொண்டாற் தியாகம் புரிந்த ராஜா கைவந்த மருத்துவத்தைச் செய்தவனே கண்ணீரால் கவலைக்கதை பெழுத விட்டாய் விண்ணோர் வரவேற்றும் கொள்ளும் உம்மை உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டுகிறோம்.

இன்று (29-11-91) காலையில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டியில் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்,

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

திக்கம்
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(எ-17?1)

## உலகின் மூலைமுடுக்கெல்லாம் தபால்களை பத்திரமாக எடுத்துச் செல்வது

# DHL துரித தபால்சேவை

யாழ்ப்பாணத்தில் உறவினரின் தபால்களை ஒப்படைக்க

DHL WORLDWIDE EXPRESS

C/o Cosmos,
Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.

(ஏ 1683)

